

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் மற்றும்
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை**





# இயற்கை மேலாண்மை




| தலைப்புகள் | பக்கம் |
|---|---|
| மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் மற்றும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் | 05 |
| பசுமைத் தமிழகம் இயக்கத்தின் கீழான செயல்பாடுகள் | 09 |
| நாற்றங்கால் வளர்ப்பு | 09 |
| பெருமளவு மரக்கன்றுகள் நடுதல் (Massive Tree Plantation) | 11 |
| சாலையோர மரங்கள் நடுதல் (Plantation) | 12 |
| பனை விதை நடவு | 15 |
| தமிழ்நாடு மாநில வாழ்வாதார இயக்கத்துடன் ஒருங்கிணைப்பு | 17 |
| வட்டார நாற்றங்கால் | 18 |
| முருங்கை நாற்றங்கால் | 21 |
| தோட்டக்கலை நாற்றங்கால் | 22 |
| விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த துறைகளுடன் ஒருங்கிணைப்பு | 24 |
| இயற்கை வள மேலாண்மை பணிகள் | |
| மண் மற்றும் கல் வரப்புகள் | 27 |
| நீர் வள மேலாண்மைக்கான 75 நாள் சிறப்பு முயற்சிகள் (2022) | 28 |
| கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்துடன் ஒருங்கிணைப்பு | 30 |
| கிணறுகள் | 31 |



# இயற்கை மேலாண்மைப் பணிகள்

**மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்**
**காடும் உடைய தரன் – குறள்**

மேற்கானும் திருவள்ளுவர் பெருந்தகை அவர்களின் திருக்குறளின்படி இப்பூவுலகிற்கு இயற்கை வழங்கியுள்ள கொடைகளில் மிகவும் இன்றியமையாதது நிலம், நீர், காற்று, காடு மற்றும் உயிரின பன்முகத்தன்மை ஆகியன ஆகும்.

நாம், இந்த வளங்களை மீள்சேர்ப்பது குறித்து சிந்திக்காமல் தொடர்ந்து நுகர்வதன் மூலம் இவ்வளங்கள் இல்லாத நிலையை நோக்கி நகர்ந்து வருகிறோம். இன்றைய நிலையில் உலக சமுதாயத்தினர் அனைவரும் வாழ "ஒரே ஒரு பூமி" மட்டுமே உள்ளது. எனவே, இதனை பாதுகாக்க செயலாற்ற வேண்டிய நிலையில் உள்ளோம்.

இயற்கை வள மேலாண்மை நமக்கும், நமது சந்ததியினருக்கும் அவசியமானதாகும். இயற்கை வளங்களை பாதுகாப்பது என்பது சமுதாய அளவில் ஈடுபடும்போது மட்டுமே சாத்தியமாகும். இயற்கை மற்றும் நீர் வளங்களை ஊறுபடாத வகையில் பயன்படுத்தினால் மட்டுமே நிலைத்த நீடித்த பொருளாதார வளர்ச்சியினை அடைய முடியும். நிலைத்த நீடித்த வளர்ச்சி என்பது இயற்கை வளங்களை ஊறுபடாமல் அடுத்த தலைமுறையினருக்கு கிடைக்கும் வகையில் தற்போதுள்ள தலைமுறையினர் பயன்படுத்துவதாகும்.

உலகின் பல்லுயிர்ப் பாதுகாப்பிற்கு அடிப்படைத் தேவையாக உள்ள தண்ணீரைப் பாதுகாத்துப் பயன்படுத்த வேண்டும். நமது முன்னோர்கள் கண்டுணர்ந்த மரபார்ந்த அனுகு முறைகளைப் பின்பற்ற வேண்டும். குளம், ஏரி, கால்வாய், கிணறு போன்ற நீர்நிலைகளின் பாதுகாப்புக் குறித்த விழிப்புணர்வை மக்களிடம் உருவாக்குதல் வேண்டும்.

"நீரின்றி அமையாது உலகம்" என்னும் தம் கருத்தைத் தெளிவாகப் பதிவு செய்துள்ளார் திருவள்ளுவர். நீரே மனித வாழ்வின் அடிப்படை என்பதால், நம்முடைய முன்னோர்கள் பல்வேறு வகையான நீர் நிலை வடிவங்களை உருவாக்கி நீரைப் பாதுகாத்தனர்.

ஒவ்வோர் ஆண்டும் பொழிகின்ற மழையின் அளவு கூடுதலாகவோ குறைவாகவோ இருக்கலாம். ஆனால், மழை வழங்கிய நீரை நீர்நிலைகளே பாதுகாத்துத் தருகின்றன.

நமது பூமி நீர்க்கோளம் என அழைத்து சிறப்பு பெற்றுள்ளது. இயற்கையைச் சார்ந்து தாவரங்களும், விலங்கினங்களும், மற்ற உயிரினங்களும் மனித சமுதாயத்தினரும் இருக்கின்றனர். எனவே, இயற்கை பாதுகாப்பானது, மண் அரிப்பினைத் தடுத்தல், மண் மாசுபடாமல் பாதுகாத்தல், காடுகள் மற்றும் வனம் சார்ந்தவற்றை போற்றிப் பாதுகாப்பதன் மூலம் விலங்கினங்கள் உள்ளிட்டவற்றை பாதுகாத்து உயிரினப் பன்முகத்தன்மையை நிலை நிறுத்தப்படும்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் மண் மற்றும் அதன் ஈரப்பதத்தினை பாதுகாக்கும் பணிகள், நீரை சேமிக்கும் பணிகளான தடுப்பணைகள், சிறுபாசன குளம், குட்டை, கால்வாய்கள், ஊரணிகள் மற்றும் பிற நீராதாரங்கள் புனரமைக்கும் பணிகளான மீள் நிரப்புக் குழி, மீள் நிரப்புத் தண்டு மற்றும் உறிஞ்சுக் குழிகள் போன்ற பணிகளை மேற்கொள்வதன் மூலம் நிலத்தடி நீர் நிலையாக தக்கவைக்கப்பட்டு, இயற்கை வளப் பாதுகாப்பில் மிக முக்கிய பங்கு வகிக்கிறது.

இயற்கை வள மேலாண்மைப் பணிகளான அகழிகள் அமைத்தல், நில மேம்பாட்டுப் பணிகள், பாரம்பரிய நீராதாரங்களைப் பாதுகாத்தல் போன்ற பணிகள் – மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் மொத்த செலவினத்தில் 65 சதவிகிதத்துக்கு குறையாமல், ஊரகப் பகுதிகளில் செயல்படுத்தப்படுகிறது. மேலும், பண்ணைக் குட்டைகள் மற்றும் இதர நீராதாரப் பணிகள் மூலம் சிறந்த நீர்ப்பாசன உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல், தோட்டக்கலை சார்ந்த பணிகளான மரக்கன்றுகள் நடுதல் மற்றும் காடு வளர்த்த ஆகிய பணிகளும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.







விளையாடு ஆயமொடு வெண் மணல் அழுத்தி,
மறந்தனம் துறந்த காழ் முளை அகைய,
நெய் பெய் "தீம் பால் பெய்து இனிது வளர்ப்ப
நும்மினும் சிறந்தது நுவ்வை ஆகும்" என்று,
அன்னை கூறினள் புன்னையது நலனே
– நற்றினை, நக்கீரர்

என்ற நற்றினைச் சங்கப்பாடலில் குழந்தைகளுக்கு மரத்தினை நட்டு வளர்ப்பதன் அவசியம் குறித்து தாய் கூறியுள்ளது தெளிவுபடுகிறது.

# பசுமைத் தமிழகம் இயக்கத்தின் செயல்பாடுகள்

## நாற்றங்கால் வளர்ப்பு

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் ஊரகப் பகுதிகளில் பெருமளவு மரக்கன்றுகள் நடவு, முருங்கை மற்றும் பழ மரக்கன்றுகள் நடவு செய்யத் தேவையான மரக்கன்றுகள் வளர்க்க ஏற்கனவே கிராம ஊராட்சியை திட்ட செயலாக்க முகமைகளாக கொண்ட 388 வட்டார நாற்றங்கால்களுடன் கூடுதலாக சுய உதவிக் குழுக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை திட்ட செயலாக்க முகமைகளாக கொண்டு பசுமை தமிழகத்தை உருவாக்கும் நோக்கில் 2022–23 ஆம் ஆண்டில் 388 வட்டார அளவிலான நாற்றங்கால்கள், 3,500 முருங்கை நாற்றங்கால்கள் மற்றும் 1,500 தோட்டக்கலை நாற்றங்கால்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.



“ஞாயிறு போற்றுதும்,
ஞாயிறு போற்றுதும்
திங்கள் போற்றுதும்...
திங்கள் போற்றுதும்
மாமழை போற்றுதும்... ...
மாமழை போற்றுதும்... ...

என இயற்கையைப் போற்றும் வாழ்வியல் தமிழர் வாழ்வியல் என சிலப்பதிகாரம் பகிரும்.



## பெருமளவு மரக்கன்றுகள் நடுதல்

தனிநபர் மற்றும் பொது நிலங்களில் மரங்கள் நடுதல் மூலம் காலநிலை மாறுபாடு மற்றும் அதன் நிகழ்வுகளிலிருந்து நிலம் பாதுகாக்கப்படுகிறது. 2021–22 ஆம் ஆண்டில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ், பெருமளவு மரம் நடுதல் திட்டத்தின் மூலம் 68 இலட்சம் மரக்கன்றுகள் நடும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2022–23 ஆம் ஆண்டில் 69 இலட்சம் மரக்கன்றுகள் நடும் பணிகள் எடுக்கப்பட்டுள்ளன.

2023–24 ஆம் ஆண்டில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ், பெருமளவு மரம் நடுதல் திட்டத்தின் மூலம் 70 இலட்சம் மரக்கன்றுகள் நடவு செய்யப்படவுள்ளன.



## சாலையோர மரங்கள் நடுதல்

கிராமப்புரங்களில் பசுமைப் பகுதிகளை அதிகரிக்கும் பொருட்டு அரசுக்கு சொந்தமான இடங்கள், பொது இடங்கள், கிராம ஊராட்சிக்கு சொந்தமான இடங்கள் மற்றும் சாலை ஓரங்களில் மரக்கன்றுகள் நடும் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2022–23 ஆம் ஆண்டிற்கு 10,000 கி.மீ. நீளத்திற்கு கிராம ஊராட்சி சாலைகள், ஊராட்சி ஒன்றிய சாலைகள், பிரதம மந்திரி கிராமச் சாலைகள் ஆகியவற்றின் இரு புறங்களிலும் மரக்கன்றுகள் நட்டு பராமரிக்கும் பணிகள் எடுக்கப்பட்டு இதுவரை 1,737.42 கி.மீ நீளத்திற்கு மரக்கன்றுகள் நடும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன, எஞ்சியுள்ள பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.





ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் நாற்றங்கால் பண்ணைகள் செயல்பட்டு வருகின்றன. இதில் வேம்பு, இலுப்பை, மந்தாரை, பூவரசு, மயில் கொன்றை, புண்ணை, புளி, அரசு கொன்றை ஆகிய சாலை ஓரம் நடக்கூடிய மரக்கன்றுகள் வளர்க்கப்பட்டு இப்பணிகளுக்கு விநியோகிக்கப்படுகிறது.



பனையின் சிறப்பு
உத்தமர் தாம் ஈயுமிடத்து
ஓங்குபனை போல்வரே
மத்திமர்தாம் தெங்குதனை
மானுவரே – முத்தலரும்
ஆங்கமுகு போல்வார்
அதமர் அவர்களே
தேங்கதலி யும்போல்வார் தேர்ந்து
– நீதி வெண்பா





## பனை விதை நடவு

தமிழ்நாட்டின் பாரம்பரியத்துடன் பண்பாட்டுடன் நெடுங்காலந்தொட்டு, வாழ்வின் பகுதியாக உள்ள பனை மரம் மிக நீளமான வேர் தொகுப்பு கொண்டதாகும். இதிலிருந்து பனை ஓலைப் பொருட்கள், பனங்கற்கண்டு, நுங்கு, கருப்பட்டி, வெல்லம், கிழங்கு மற்றும் பதநீர் ஆகியன உற்பத்தி செய்யப்படுகிறது. இவற்றின் மருத்துவ குணங்கள் அதிகமாகும். பனை மரங்களை நீர்நிலைகளின் கரையோரங்களில் வளர்ப்பதன் மூலம் நீர் வளம் மற்றும் கரைகள் பாதுகாக்கப்படும். எனவே, கிராம மக்களைத் தன்னார்வத்துடன் ஈடுபடுத்திப் பனை மரங்களை காக்கும் பொருட்டு, பனை விதைகளை சேகரித்து மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட பணியாளர்கள் மூலம் நடவு செய்யப்படுகிறது.



# தமிழ்நாடு மாநில வாழ்வாதார இயக்கத்துடன் ஒருங்கிணைப்பு

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் மகளிர் பங்களிப்பினை உயர்த்தவும், சுய உதவிக் குழுக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை திட்ட செயலாக்க முகமைகளாக கொண்டு பசுமைத் தமிழகத்தை உருவாக்கும் நோக்கில் 2022–23 ஆம் ஆண்டில் 388 வட்டார அளவிலான நாற்றங்கால்கள், 3,500 முருங்கை நாற்றங்கால்கள் மற்றும் 1,500 தோட்டக்கலை நாற்றங்கால்கள் ஒன்றிய / மாநில நிதிப்பங்களிப்புடன் 92 கோடியே 12 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.













## வட்டார நாற்றங்கால்

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் பல்வேறு மரக்கன்றுகள் நடும் பணிகளுக்கு தேவையான மரக்கன்றுகளை வளர்க்க 388 ஊராட்சி ஒன்றியங்களிலும் நாற்றங்கால்கள் ஏற்படுத்தப்பட்டு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டப் பணியாளர்களைக் கொண்டு மரக்கன்றுகள் வளர்த்து, நடவு பணிகளுக்கு விநியோகிக்கப்படும். 2022–23 ஆம் ஆண்டில் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை திட்ட செயலாக்க முகமைகளாகக் கொண்டு கூடுதலாக 388 புதிய நாற்றங்கால்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவை மகளிர் சுயஉதவிக் குழுவினரின் வாழ்வாதார நடவடிக்கைகளுக்குப் பயன்படும்.





**செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்து**
**இயற்கை அறிந்து செயல்.**

**– குறள் 637**

நூலறிவால் செயலைச் செய்யும் வகைகளை அறிந்த போதிலும் உலகத்தின் இயற்கையை அறிந்து அதனோடு பொருந்துமாறு செய்ய வேண்டும்.



சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய
பிறங்குவெள் எருவி விழும் சாரல்
பறம்பின் கோமான் பாரியும்
என்ற பாடல் பாரியின் இயற்கை நேயத்தை வெளிப்படுத்துகிறது





## முருங்கை நாற்றங்கால்

ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை, திட்ட செயலாக்க முகமைகளாகக் கொண்டு 2022–23 ஆம் ஆண்டில் 3,500 முருங்கை நாற்றங்கால்களில் வளர்க்கப்படும். 21,00,000 இலட்சம் முருங்கை நாற்றுகள் சுய உதவிக் குழுவில் உள்ள பெண்களின் வீடுகளுக்கு வழங்குவதன் மூலம் முருங்கையின் பலன்களைக் கொண்டு அவ்வீடுகளில் உள்ள வளரிளம் பெண்கள், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களின் இரும்புச் சத்தினை அதிகரிக்க உதவும்.

## தோட்டக்கலை நாற்றங்கால்

ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை, திட்ட செயலாக்க முகமைகளாக கொண்டு 2022–23 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டுள்ள 1,500 தோட்டக்கலை நாற்றங்கால்களில் வளர்க்கப்படும் 8,15,000 நாவல், மாதுளை, மா, பலா, சப்போட்டா, எலுமிச்சை போன்ற தோட்டக்கலை பழக்கன்று நாற்றுகள் 7,760 குறு/சிறு / ஆதி திராவிட / பழங்குடியின விவசாயிகளின் நிலங்களில் நடவு செய்வதன் மூலம் அவர்களது வாழ்வாதாரம் உயர்த்தப்படும்.









## விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த துறைகளுடன் ஒருங்கிணைப்பு

### இயற்கை மேலாண்மைப் பணிகள்:

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் சட்ட அட்டவணை 1ன் படி 4 பிரிவுகளாக அனுமதிக்கப்பட்ட பணிகள் வகைபடுத்தப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட 268 பணிகளில், 182 பணிகள் இயற்கை மேலாண்மைப் பணிகளாகும். 164 பணிகள் வேளாண்மை மற்றும் வேளாண்மை சார்ந்த பணிகளாகும்.

2022 – 23 ஆம் ஆண்டில் 1,67,028 இயற்கை மேலாண்மை பணிகளான தடுப்பணை, பண்ணைக் குட்டை, மண்வரப்பு, கல்வரப்பு மற்றும் மரக்கன்றுகள் நடுதல் போன்ற பணிகளுக்கு இதுவரை 73.65% செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மா, பலா, கொய்யா, நாவல், சப்போட்டா, மாதுளை ஆகிய மரக்கன்றுகள் வட்டார நாற்றங்கால்களில் வளர்க்கப்பட்டு வருகின்றன. இவை ஊராட்சிகளில் மேற்கொள்ளப்படும்மரக்கன்றுகள் நடும் பணிக்கு விநியோகிக்கப்படும்.

இயற்கை என்பது இயல்பானது; மனித சக்தியில்லாமல் தானே தோன்றிய பொருள்கள் அனைத்தும் இயற்கை எனப்படும். இதனைத் தொல்காப்பியம்,

> **“நிலம் நீர் தீவளி விசும்பொடு ஐந்தும்**
> **கலந்த மயக்கம் உலகம் ஆதலின்”**
> **– தொல்.மரபு90**

இவ்வைந்தும் இணைந்தது உலகம் என்று கூறுகிறது.

குளம் தொட்டு, கோடு பதித்து, வழி சீத்து,
உளம் தொட்டு உழுவயல் ஆக்கி, வளம் தொட்டுப்
பாகுபடும் கிணற்றோடு என்று இவை
பாற் படுத்தான் ஏகும் சுவர்க்கம் இனிது.

– சிறுபஞ்சமூலம்

என்ற 5 இயற்கை வளப் பணிகளை
மேற்கொள்பவர்கள் சிறப்பு பெறுவார்கள்
என காரியாசன் கூறுகிறார்



## மண் மற்றும் கல் வரப்புகள்

விவசாய நிலத்தின் எல்லைகளில் மண்ணால் மற்றும் கற்களால் ஆன வரப்புகளை ஏற்படுத்துவதன் மூலம் நிலத்தின் சரிவு சமன் செய்யப்படுவதுடன், மழை நீர் வழிந்து செல்வதை தவிர்த்து, நிலத்திலேயே வடிவதை உறுதி செய்கிறது. இதன் மூலம் மண் சரிவு தடுக்கப்பட்டு மண்ணின் ஈரப்பதம் பாதுகாக்கப்படுகிறது. தாவர வளர்ச்சி, நிலத்தடிநீர் சேமிப்பு போன்றவற்றை இயக்கும் நீரியல் சுழற்சியில் மண்ணின் ஈரப்பதம் முக்கிய பங்கு வகிக்கிறது. மண் மற்றும் கற்களால் ஆன வரப்புகளை ஏற்படுத்துவதன் மூலம் நிலத்தடி நீர் மேம்படுவதுடன் விவசாய உற்பத்தித்திறன் அதிகரிக்கப்படுகிறது.





## நீர் வள மேலாண்மைக்கான 75 நாள் சிறப்பு முயற்சிகள் 2022

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் மார்ச் 22, 2022 (உலக நீர் தினம்) முதல் ஜீன் 5, 2022 (உலக சுற்றுச்சூழல் தினம்) வரையிலான காலத்தில் 75 நாள் சிறப்பு முயற்சியாக நீர்வள பணிகள் எடுக்கப்பட்டது. இது “ஜல்சக்தி அபியான்” மழைநீர் சேகரிப்பு பிரச்சாரத்தை ஒரு பகுதியாக வடிவமைக்கப்பட்டது. ஊரகப் பகுதிகளில் பெறும் ஒவ்வொரு துளி மழை நீரையும் சேகரிக்க தடுப்பணைகள், பண்ணைக் குட்டைகள், நீர் அகழிகள், மேற்கூரை மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் போன்ற 14,741 பணிகள் ரூ.259.18 கோடி செலவினத்தில் செய்து முடிக்கப்பட்டுள்ளது.








**ஊர்க்கும் அணித்தே பொய்கை பொய்கைக்குச்**
**சேய்த்தும் அன்றே, சிறுகான் யாறே**
**– குறுந்தொகை 113**

நீர் நிலைகளை நீரோட்ட அடிப்படையில் தொடரச்சியாக ஓடி நிரப்பும் வகையில் அமைப்பது குறித்து செய்தியைத் தெரிவிக்கிறது.

## கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்துடன் ஒருங்கிணைப்பு

வேளாண் மற்றும் உழவர் நலத்துறை, வேளாண் / தோட்டக்கலைத் துறையினால் உருவாக்கப்பட்ட தொகுப்புகளில் 2021 – 22 மற்றும் 2022 – 23 ஆம் ஆண்டுகளில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் மூலம் தேர்வு செய்யப்பட்ட 5,201 கிராம ஊராட்சிகளில் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் தடுப்பணைகள், ஓரடுக்கு கப்பிசாலை, பண்ணைக்குட்டைகள், கிணறுகள், உணவு தானிய கிடங்கு போன்ற பணிகள் விவசாயிகளின் நலனுக்காக எடுக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.















## கிணறுகள்

குறு / சிறு / ஆதி திராவிடர் / பழங்குடியின விவசாயிகளுக்கு அவர்களது விவசாய உற்பத்தியை அதிகரித்து வாழ்வாதாரத்தினை மேம்படுத்திட மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ், தனி நபர் மற்றும் குழுக்களுக்கான சமுதாயக் கிணறுகள் அமைக்கப்பட்டு வருகின்றன. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் கிணறுகள் அமைத்து தருவதன் மூலம், அதற்கான முதலீட்டை விவசாய பணிகளுக்கு மேற்கொள்ள உதவுகின்றன. மேலும், கிணறு அமைப்பதற்கு முன்பு குறைவான விளைச்சல் தரும் காய்கறிகள் உற்பத்தி செய்து வந்த நிலைமாறி ஆண்டுக்கு மூன்று முறை கரும்பு, நெல் போன்ற பயிர் உற்பத்தி செய்து விவசாய வருமானம் இரு மடங்காக உயர்வது அறியப்படுகிறது.

“காடுகள் இன்றி நீர் வளம் சிறக்காது!
நீர் வளம் இன்றி வேளாண்மை வளப்படாது”
எனவே, வளமான எதிர் காலத்திற்கு காடுகள் அவசியம்.
காடுகள் வளம் பெற வன உயிரினங்கள் அவசியம்!

**மு.க.ஸ்டாலின்**
தமிழ்நாடு முதலமைச்சர்



**இயற்கை மேலாண்மை**
மார்ச் 2023

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் மற்றும்
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்
**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை**
www.tnrd.tn.gov.in